கடலூர் மத்தியசிறை கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணைகள்.
முன்னிலை - திருமதி.நிகிலா நாகேந்திரன், எம்.ஏ.,

ந.க.16725/பொ.1/2017. நாள்.12.12.2018.
திருவள்ளுவராண்டு - 2049, விளம்பி வருடம், கார்த்திகைத் திங்கள் 26-ஆம் நாள்.

பொருள் - சிறைத்துறை - மத்தியசிறை, கடலூர் - தட்டச்சர் பதவியில் தமிழ்நாடு தேர்வாணையம் தொகுதி IV போட்டித் தேர்வு 2015-2016 மூலம் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்ட தட்டச்சருக்கு பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை -1) கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறைத் தலைவர் குறிப்பாணை எண்.34375/இஎஸ்.1/2017-1, நாள்.20.10.2017.
2) கண்காணிப்பாளர், மத்தியசிறை, கடலூர் செயல்முறை ஆணை எண்.16725/பொ.1/2018, நாள்.25.10.2017.

---

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV 2015-2016-ல் தேர்வு செய்யப்பட்டு, பார்வை 2 மற்றும் 3-ல் காணும் ஆணைகளின்படி கடலூர் மத்தியசிறையில் தற்காலிக தட்டச்சராக பணி நியமனம் செய்யப்பட்ட, செல்வி.ஆர்.புவனேஸ்வரி என்பவர் 25.10.2017 முற்பகல் கடலூர் மத்தியசிறையில் பணியில் சேர்ந்துள்ளார். இவரது கல்வி தகுதி சான்றுகள் மற்றும் தொழில்நுட்ப சான்றுகள் ஆகியவற்றின் உண்மை தன்மை அறிக்கை பெறப்பட்டதை தொடர்ந்து இவரது பணியினை தட்டச்சர் பதவியில் வரன்முறை செய்து ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும்.

2) எனவே தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின்படி தேர்வு செய்யப்பட்ட செல்வி.ஆர்.புவனேஸ்வரி என்பவரது பணியினை தட்டச்சர் பதவியில், சென்னை உயர்நீதிமன்றத்தில் ஏற்கனவே தொடரப்பட்டுள்ள ரிட் மனுவின் மீது சென்னை உயர்நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்படும் ஆணைக்குட்படுத்தி (Subject to out come of the writ petitions pending before the Hon'ble High Court, Madurai Bench, Madras) இவர் பணியில் சேர்ந்த நாளான 25.10.2017 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

3) செல்வி.ஆர்.புவனேஸ்வரி, தட்டச்சர், மத்தியசிறை, கடலூர் என்பவரை இவரது பணி வரன்முறை செய்யப்பட்ட நாளான 25.10.2017 முதல் மூன்றாண்டு கால தொடர் பணிக் காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது. இவர் தனது தகுதி காண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் (Tamil Nadu Government Office Manual) தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். மேலும் Computer on Office Automation Course முடித்து அதில் தேர்ச்சி பெற வேண்டும்.

..2.

மேற்கண்ட பதிவுகள் யாவும் இவரது பணிப்பதிவேட்டில் பதியப்பட்டது எனவும் சான்றளிக்கப்படுகிறது.

சிறை கண்காணிப்பாளர்,
மத்தியசிறை, கடலூர்-4.

பெறுநர்
செல்வி.ஆர்.புவனேஸ்வரி, தட்டச்சர், மத்தியசிறை, கடலூர்.

நகல்- கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவர், சென்னை.8
- தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்- சிறைத்துறை துணைத்தலைவர், வேலூர் சரகம், வேலூர்.
- தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்- நிர்வாக அலுவலர் / அலுவலக மேலாளர், மத்தியசிறை, கடலூர்.

நகல்- பொ.3, இளநிலை உதவியாளர், மத்தியசிறை, கடலூர்.
(பணிப்பதிவேட்டில் பதிவு செய்ய அறிவுறுத்தப்படுகிறது).

நகல்- பணிப்பதிவேடு / கண்காணிப்பாளர் ஆணைப் புத்தகம் / பொ3 இருப்புக் கோப்பு.